07.04.2026

OS No: 187/2021

வா.சா. 3 - பாண்டீஸ்வரன் த/பெ. திரு. பெரியசாமி

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது சொந்த ஊர் காரைக்குடி. நான் திருமணம் செய்தது மேலப்பட்டி கிராமம். எனது மனைவி நீலாவிற்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் எனது மனைவி நீலா கிரையம் வாங்கிய வகையில் பாத்தியம். எந்த வருடம் மேற்படி சொத்தை கிரையம் பெற்றார் என்றால் ஞாபகமில்லை. வாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் மேலப்பட்டியில் நான் திருமணம் செய்த காரணத்தால் வாதி எனக்கு பழக்கம். தாவா சொத்தை எனது மனைவி வாதிக்கு கிரையம் செய்து கொடுத்திட எந்த வருடம் தொடர்பு கொண்டார் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து கிரையம் பெற்ற சமயத்தில் வாதி உள்ளூரில் தான் இருந்தார் என்றால் இல்லை, கத்தாரில் இருந்தார். கிரையப் பத்திரம் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி கருத்தாசாமி பெயரில் பதிவு செய்யப்பட்டது. கிரைய தொகை எவ்வளவு என்றால் ரூ.70,000 ஆகும். ரூ.70,000த்தை 1ம் பிரதிவாதி எனக்கு நேரடியாக கொடுத்தாரா என்றால் இல்லை. மேற்படி தொகையை யார் என்னிடம் கொடுத்தது என்றால் வாதியின் நண்பர் கொடுத்தார், அவர் பெயர் எனக்கு தெரியாது. எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் கிரையப் பத்திரம் பதிவு செய்யும் போது யார் பதிவு அலுவலகத்திற்கு வந்தார்கள் என்றால் வாதியின் அப்பா, நான், எனது மனைவி சென்றிருந்தோம். சாட்சிகள் யார் என்று நினைவு இல்லை. சாட்சிகளை கருத்தாசாமிதான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். வாதி என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனக்கு பதிலாக தனது தந்தை பெயருக்கு சொத்தை பதிவு செய்து தருமாறு சொன்னார் என்ற சங்கதி உண்மையல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஊரில் எவ்வளவு சொத்து உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் என்ன உள்ளன என்றால் தாவா சொத்தில் எதுவும் இல்லை காடாக தான் உள்ளது. தாவா சொத்தை கிரையம் பெற 1ம் பிரதிவாதி தனது சம்பாத்தியத்தை என்னிடம் கொடுத்து அதனடிப்படையில் சொத்து

கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. எனது மனைவி எங்கு வேலை பார்க்கிறார் என்றால் சிங்கம்புணரி யூனியன் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார். எனது மனைவி தற்பொழுது நல்ல உடல்நிலையில் உள்ளார் என்றால் நல்ல உடல்நிலையில் தான் உள்ளார். பயணம் செய்திட அவரால் இயலாது. எனது ஊருக்கும் சிங்கம்புணரிக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 10 கி.மீ தூரம் ஆகும். எனது மனைவி நெடுந்தூரம் பயணம் செய்யும் உடல்நிலையில் உள்ளார் என்றும் அது குறித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சி அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக எனது மனைவி சாட்சியம் அளிப்பதில் இருந்து தவிர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா கிரைய சொத்திற்கான கிரைய தொகை 1ம் பிரதிவாதி கொடுத்து கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சங்கதி குறித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.07 16:05:21 +0530